ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஆறாம் பத்து

## நான்காம் திருவாய்மொழி - குரவை ஆய்ச்சியர்
## கண்ணனுடைய குணசேஷ்டிதங்களை எப்பொழுதும் பேசப் பெற்றமைக்குக் களித்தல்

** குரவை ஆய்ச்சியரோடு கோத்ததும் * குன்றம் ஒன்று ஏந்தியதும் *
உரவு நீர்ப் பொய்கை நாகம் காய்ந்ததும் * உட்பட மற்றும் பல **
அரவிற் பள்ளிப் பிரான் தன் * மாய வினைகளையே அலற்றி *
இரவும் நன்பகலும் தவிர்கிலம் * என்ன குறைவு நமக்கே? 1

கேயத் தீங்குழல் ஊதிற்றும் * நிரை மேய்த்ததும் கெண்டை ஒண்கண் *
வாசப் பூங்குழல் பின்னை தோள்கள் மணந்ததும் * மற்றும் பல **
மாயக் கோலப் பிரான் தன் * செய்கை நினைந்து மனம் குழைந்து *
நேயத்தோடு கழிந்த போது * எனக்கு எவ்வுலகம் நிகரே? 2

நிகரில் மல்லரைச் செற்றதும் * நிரை மேய்த்ததும் நீள் நெடுங்கை *
சிகர மா களிறு அட்டதும் * இவை போல்வனவும் பிறவும் **
புகர் கொள் சோதிப் பிரான் தன் * செய்கை நினைந்து புலம்பி * என்றும்
நுகர வைகல் வைகப் பெற்றேன் * எனக்கு என் இனி நோவதுவே? 3

நோவ ஆய்ச்சி உரலோடு ஆர்க்க * இரங்கிற்றும் வஞ்சப் பெண்ணை *
சாவப் பால் உண்டதும் * ஊர் சகடம் இறச் சாடியதும் **
தேவக் கோலப் பிரான் தன் * செய்கை நினைந்து மனம் குழைந்து *
மேவக் காலங்கள் கூடினேன் * எனக்கு என் இனி வேண்டுவதே? 4

வேண்டித் தேவர் இரக்க வந்து பிறந்ததும் * வீங்கிருள் வாய்
பூண்டு * அன்று அன்னை புலம்பப் போய் * அங்கோர் ஆய்க்குலம் புக்கதும் **
காண்டல் இன்றி வளர்ந்து * கஞ்சனைத் துஞ்ச வஞ்சம் செய்ததும் *
ஈண்டு நான் அலற்றப் பெற்றென் * எனக்கு என்ன இகல் உளதே? 5

இகல் கொள் புள்ளைப் பிளந்ததும் * இமில் ஏறுகள் செற்றதுவும் *
உயர் கொள் சோலைக் குருந்து ஒசித்ததும் * உட்பட மற்றும் பல **
அகல் கொள் வையம் அளந்த மாயன் * என் அப்பன் தன் மாயங்களே *
பகல் இராப் பரவப் பெற்றேன் * எனக்கு என்ன மனப் பரிப்பே? 6

மனப் பரிப்போடு * அழுக்கு மானிட சாதியில் தான் பிறந்து *
தனக்கு வேண்டு உருக் கொண்டு * தான் தன சீற்றத்தினை முடிக்கும் **
புனத் துழாய் முடி மாலை மார்பன் * என் அப்பன் தன் மாயங்களே *
நினைக்கும் நெஞ்சு உடையேன் * எனக்கு இனி யார் நிகர் நீணிலத்தே? 7

நீணிலத்தொடு வான் வியப்ப * நிறை பெரும் போர்கள் செய்து *
வாணன் ஆயிரம் தோள் துணித்ததும் * உட்பட மற்றும் பல **
மாணியாய் நிலம் கொண்ட மாயன் * என் அப்பன் தன் மாயங்களே *
காணும் நெஞ்சு உடையேன் * எனக்கு இனி என்ன கலக்கம் உண்டே? 8

கலக்க ஏழ் கடல் ஏழ் மலை * உலகு ஏழும் கழியக் கடாய் *
உலக்கத் தேர் கொடு சென்ற மாயமும் * உட்பட மற்றும் பல **
வலக்கை ஆழி இடக்கை சங்கம் * இவை உடை மால் வண்ணனை *
மலக்கு நா உடையேற்கு * மாறுளதோ இம்மண்ணின் மிசையே? 9

மண் மிசைப் பெரும் பாரம் நீங்க * ஓர் பாரத மா பெரும் போர்
பண்ணி * மாயங்கள் செய்து * சேனையைப் பாழ் பட நூற்றிட்டுப் போய் **
விண் மிசைத் தன தாமமே புக * மேவிய சோதி தன் தாள் *
நண்ணி நான் வணங்கப் பெற்றென் * எனக்கு ஆர் பிறர் நாயகரே? 10

** நாயகன் முழு ஏழ் உலகுக்குமாய் * முழு ஏழ் உலகும் * தன்
வாயகம் புக வைத்து உமிழ்ந்து அவையாய் * அவை அல்லனுமாம் **
கேசவன் அடியிணை மிசைக் * குருகூர்ச் சடகோபன் சொன்ன *
தூய ஆயிரத்து இப்பத்தால் * பத்தர் ஆவர் துவள் இன்றியே 11

**அடிவரவு:** குரவை கேய நிகரில் நோவ வேண்டி இகல் மனம் நீணிலம் கலக்க மண் நாயகன் துவள்

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---